உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சீகாளத்திக்கலம்பகம்.

இது

திருஎவ்வுளூர்

இராமசாமி செட்டியாரவர்கள்

இயற்றியது.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1908.

விலை அணா 2.

*Copyright Registered.*

## ஆக்கியோன்.

### குறள் வெண்பா.

கலைசால்கா ளத்திக் கலம்பகஞ்சொற் றன்பா
வலராம சாமியெனு மால்.

# பொருளடக்கம்.


I. சீகாளத்திக்கலம்பகம் ... ... ...

1. கடவுள்வாழ்த்து ... ... க

2. வேண்டுகோள் ... ... ... ச

3. அவையடக்கம் ... ... ... ச

4. ஆசிரியர்வணக்கம் ... ... ரு

II. கலம்பகப்பாட்டியல் ... ... ... ருஅ

III. இக்கலம்பகவுறுப்பகராதி ... ... ருகூ

IV. செய்யுள்முதற்குறிப்பகராதி ... ... சா0

# இக்கலம்பக உறுப்பகராதி.


| | | பக்கம். | பாட்டு. |
|---|---|---|---|
| 1. | அம்மானை ... ... ... | ௧௫. | ௨௨. |
| 2. | இடைச்சியார் ... ... | ௨0. | ௩௯. |
| 3. | இயமகம் ... ... ... | ௧௨. | ௧0. |
| 4. | இரங்கல் ... ... ... | ௧௬-௨௩, ௨௧ - ௪௨ | ௪௩. |
| 5. | இனியவை. ... ... | ௩௩. | ௮௯. |
| 6. | உயிர்வருக்கமோனை ... ... | ௩௩. | ௮௭. |
| 7. | ஊசல். ... ... ... | ௩௧. | ௮௩. |
| 8. | ஊர்சிலேடை ... ... | ௧௫. | ௨0. |
| 9. | களி ... ... ... | ௨௯, | ௭௩, ௭௪. ௭௫. |
| 10. | கார்காலம் ... ... | ௩௨. | ௮௫. |
| 11. | கிள்ளைவிடுதூது ... ... | ௨௬. | ௯௫. |
| 12. | கீரையார் ... ... | ௧௩. | ௧௨. |
| 13. | குயிற்பயிற்று ... ... | ௨0. | ௩௮. |
| 14. | குயிலையிரத்தல் ... ... | ௩௪. | ௯௫. |
| 15. | குறம் ... ... ... | ௨௬, | ௬௬, ௬௭. |
| 16. | கைக்கிளை ... ... | ௩௨, | ௮௬. |
| 17. | சம்பிரதம் ... ... | ௧௭. | ௩௧. |
| 18. | சித்து ... ... ... | ௨௪. | ௫௨. |
| 19. | சீர்பாதப்புகழ்ச்சி ... ... | ௩௩. | ௮௮. |
| 20. | சுவடுகண்டிரங்கல் ... ... | ௧௬. | ௨௫. |
| 21. | தவம் ... ... ... | ௨௮. | ௭௧. |
| 22. | தழை ... ... ... | ௧௯. | ௩௪. |
| 23. | தாய்க்கூற்று ... ... | ௨௫. | ௫௯. |
| 24. | நற்றாயிரங்கல் ... ... | ௨௫. | ௬௧. |
| 25. | நிந்தாஸ்துதி ... ... | ௧௨, ௨௫. | ௧௧, ௫௯. |
| 26. | பாங்கி தலைவன்வரவை தலைவிக்குணர்த்தல் | ௩௨. | ௮௪. |
| 27. | பாண் ... ... ... | ௨௫. | ௬0. |
| 28. | பிச்சியார் ... ... ... | ௨௭. | ௬௮. |
| 29. | புயவகுப்பு... ... ... | ௧௧. | ௯. |
| 30. | மடக்கு ... ... ... | ௪0, ௨௮. | ௫, ௭௨. |
| 31. | மதங்கியார் ... ... | ௨0. | ௪0. |
| 32. | மறம் .. ... .. | ௧௮. | ௩௨, ௩௩. |
| 33. | மேகவிடுதூது ... ... | ௧௭, ௩௧. | ௩0, ௮௧. |
| 34. | வண்டுவிடுதூது ... ... | ௨௨ | ௪௬. |
| 35. | விலைச்சியார் ... ... | ௧௩. | ௧௩. |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீகாளத்திக்கலம்பகம்.

## பாயிரம்.

## கடவுள் வாழ்த்து

### விநாயகர் துதி.

காப்பு. நேரிசைவெண்பா.

நீலம்பகர்கா ளத்திவரை நித்தர்மலர்த் தாளிற்
கலம்பகப்பா மாலை கமழச்—* சொலம்பகருட்
கஞ்சந்தி யானநெறி காட்டி வரமளிக்கு
மஞ்சந்தி யானை துணை யாம். (க)

### நடேசர் துதி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கங்கைநீ ரறுகு மான்முன் காட்டுமெம் புலிசேர் வேணித்
துங்கமார் காடு காட்டிச் சுடர்மழு மான்கை காட்டிப்
பங்கிலோர் மயிலைக் காட்டிப் பணியும்வெம் புலியுங் காட்டிப்
பொங்குசிற் சபைக்க ணிர்த்தம் புரிபிரான் ரூடு இப்பாம். (உ)

---

* சொல் அம்பகர் - சொன்னோக்க முள்ளவர்.

## சிவகாமசுந்தரியம்மை துதி.

வேறு.

தண்ணாரு நறுந்துளபத் தாமமுரா கரிமகிழ்சோ
தரியின் புள்ள
பண்ணாரு மறைபயில்பண் ணவன்பணியு மணியணிப்பூண்
பதத்தாய் தூயை
விண்ணாருந் தேவர்கட்குந் தீதகற்று நாதாந்த
விமலை யான
தெண்ணாருஞ் சிவகாம சுந்தரியி னிணைமலர்த்தாள்
சென்னி சேர்ப்பாம். (௫.)

## குகப்பிரான் துதி.

குறள்வெண் செந்துறை.

நகப்பிராட் டிக்குள நயப்ப வருமொரு
குகப்பிரான் றண்முடி கொண்டிறைஞ் சுதுமே. (௬)

## சரசுவதி துதி.

குறள்வெண்பா.

வெண்டா மரைக்கண் மிளிர்வெள்ளை மேனிநல்லா
டண்டா மரைத்தாள் சரண். (௭)

## சமயாசாரியர் நால்வர் துதி.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உருப்பவளா நிறத்தரனார்க் கினிமையுறத் திருக்கடைக்காப்
புரைத்தா ரன்பு
பெருப்பவளத் தமுதெனத்தே வாரங்கட் டுரைசெய்தார்
பிறங்கு மேருப்
பொருப்பவளா வாம்விருப்ப மேவியுயர் திருப்பாட்டுப்
புகன்றார் * மெய்ச்ச
திருப்பவளா முறுவாச கஞ்சொற்றா ரிவர்கள்பொற்றாள்
சிரமேற் கொள்வாம். (௮)

* மெய் சதிர் உப்ப வளம் எனப்பிரிக்க.

# சீகாளத்திக்கலம்பகம்.

## கண்ணப்பநாயனார் துதி.

இதுவுமது.

சீரமருவுங் கட்செவியைக் குண்டலமாக் கொண்டபரன்
றிருச்செ விக்கட்
டாமருவு முழுவலன்பார் மொழியமுத மூக்கமுடன்
றழையச் சேர்த்துப்
பரமருவு மறைபகர்செம் பவளவாய் விடக்கமுதம்
பரிந்து ளூட்டி
வரமருவு மெய்ப்பேறு பெற்றகண் ணப்பர்சரண்
வணங்கி வாழ்வாம். (எ)

## சிவகோசரியார் துதி.

கொச்சகக்கலிப்பா.

காசரியார் கங்கணக்கைக் காளத்தி யாளுர்க்கு
மூசரியார் நறுமலர்கொண் டருச்சித்தன் முழுக்காட்டன்
மேசரியா ராமகத்தின் வித்தாரென் றோதுசிவ
கோசரியா ரெழிற்சரண கோகனக நிதந்தொழுவாம். (அ)

## நக்கீரர் துதி.

நேரிசைவெண்பா.

கண்பார்த் தருள்கயிலைக் காளத்தி நாதர்தம்மேல்
வெண்பாவந் தாதி விரித்துரைத்த—வொண்பா
வலனென்னு நக்கீர மாதவனின் றாற்சீர்
நலமன்னித் துன்னிடவே நன்கு. (கூ)

## சேக்கிழார் சுவாமிகள் துதி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஒன்றரத்து ரியவொலியு மறையொலியு மணவொலியு
முயர்தில் லைப்பொன்

மன்றத்தூர்ச் சிதநடஞ்செய் தருளெம்மான் பதமுளரி
மனத்தே பூப்ப
நின் * றத்தா ரரனடியார் புராணமியற் றிப்பேறு
நிலவப் பெற்ற
குன்றத்தூர்த் தொண்டர்சீர் பரவுவார் சரண்சிரமேற்
கொண்டு வாழ்வாம். (௧0)

## சிவப்பிரகாசர் வேலையர் கருணைப்பிரகாசர் துதி.

இதுவுமது.

பொங்குறுந லாக்கச்சொ லுயர்செஞ்சொல் குறிப்புச்சொல்
புகன்முச் சொல்லுந்
தங்கியபல் பிரபந்தஞ் சாற்றிச்சீ காளத்தித்
தலபு ராண
மங்குரைத்த சிவப்பிரகா சத்தேவர் வேலைய
ரருள்வாய்ந் தோங்கு
நங்கருணைப் பிரகாச ரெனுஞ்சிவஞா னச்செல்வர்
நற்றாள் போற்றி. (௧௧)

## வேண்டுகோள்.

நேரிசைவெண்பா.

காளத்தி நாதா கலம்பகப்பா மாலைநின்பூந்
தாளொத் திசைந்துறவே சாற்றுவதாற்—கோளைத்
திருத்தி யணிபெறச்சீர் செய்தேற்றுக் கொள்வாய்
குருத்துவங்கண் டும்பர்வணங் கும். (௧௨)

## அவையடக்கம்.

கலிவிருத்தம்.

சிற்பநூல் வல்லுநர் சிறார்செய் மட்பணி
அற்பமாம் பணியதென் றவற்றை யெள்குவரோ

* அத்து - செவ்வை.

கற்பவ ரற்பொடு காணக் காட்டுதல்
விற்பனர்க் குரியதோர் விதிய தாகுமால். (௧௩)

## ஆசிரியர்வணக்கம்.

### நேரிசை ஆசிரியப்பா.

சோற்றவ மாண்பு சுகமொடு மல்கக்
கற்றுவல் லுநருங் கனிந்துள மேத்துந்
தணிகை யம்பதிச் சரவணப் பெருமாண்
மணியருள் வித்துவ மணிகந்த சாமிப்
பரமா சிரியன் பதமலர்
சிரமிசைச் சூட்டுதுந் தெளிவுறற் பொருட்டே. (௧௪)

பாயிர முற்றிற்று.

## நூல்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

நீர்பூத்த கார்க்கடல்சூழ் நிலவுலக மேத்தெடுப்பச்
சீர்பூத்த மாமறைகள் சிந்தித்தஞ் சலிபுரியப்
பொன்புணரோண் மணித்திருமால் புகலயன்வெள் ளானையினன்
தென்பரிதி திங்களா தியவிபுதர் பணிகேட்பத்
தேர்வுறுமைந் தெழுத்தாமு சிதநமச்சி வாயமந்த்ர
மார்வமுட னந்தணர்சொ லக்கங்கை வைத்தோதப்
புகழ்பொன்மலை தருஞானப் பூங்கோதை யிடமருவக்
ககனமுஞ்சொல் காளத்திக் கவின்கோயி லமர்ந்தோய்கேள் !

(இவை எட்டடித்தரவு.)

மூத்தமிழ்தேர் சம்பந்த மூர்த்தியின்பா டற்கிரங்கி
முத்துவிதா னஞ்சிவிகை முதலியதந் தருளினையே!

வயிரவவே டம்பூண்டோர் வள்ளல்சிறுத் தொண்டரோளிர்
வயிரவொட்டுக் காதணிந்த மதலையினூன் விழைந்தனையே!

பச்சைப்புன் மேய்ந்துறுமப் பசுநிரையைக் காத்தபசும்
பச்சைவண்ணத் திருமாற்குப் படையாழி யீந்தனையே !

மாணிக்க மாமலைத்தேன் மானுமது ரிதச்செஞ்சொன்
மாணிக்க வாசகர்க்கா வைகையின்மண் சுமந்தனையே!

செம்பாத்தை மலர்மறையத் திகழ்தும்பை பூத்ததொப்பச்
செம்பவள மேனியின்மேற் றிருநீறு பூத்தனையே!

(இவை ஐந்தும் ஈரடித்தாழிசைகள்.)

மலர்கதிர் மணிமுடி மருவிய விபுதர்கள்
குலமணி யெனுமுறை கொளுமுயர் பதவியை.

பொலிகழ லடிகொடு புலியுரு வரவுரு
நலமுனி வார்தொழ நடமிடு திருவினை.

மலிபுக ழிருடியர் மகமுதி மறிமழு
நிலைதரு கரமிசை நிறுவிய கருணையை.

புலனுயர் கவிஞர்கள் புகலுமெ யவையிடை
யிலகுடு பதியென விசையுறு பதியினை.

(இவை நான்கும் ஈரடி அராகங்கள்.)

கள்ளமிலா நின்மனையாள் கச்சியினி லறம்வளர்க்க
வள்ளியிடும் பிச்சையென்றவ் வறவரில்லி னிரந்ததென்னே!

புனறுடை ஞரவடம் பொன்னியில்வீழ்ந் திடவதனைக்
கனவானைக் காவினின்கார்க் களமுறச்செய் ததும்வியப்பே!

மலையுருவத் துறவயன்மால் வாலனமும் வன்றியுமாத்
தலையடிதே டிக்காணாத் தாம்புரிந்த திறும்பூதே!

கடுஞ்சிலந்தி விடநாகங் கடநாக மன்பர்கள்செய்
திருந்தொண்டிற் சிறந்ததுதா னவைகாளத் திப்பெயரோன்!

உம்பளஞ்சம் பளம்பணங்கா சுண்டோதென் றில்லையிற்சிற்
றம்பலத்தோர் காறூக்கி யாடல்செய்த தெற்றினுக்கோ!

(இவை ஐந்தும் பெயர்த்தும் வந்த ஈரடித்தாழிசைகள்.)

மதனெரி படநுதல் விழியைத் திறந்தனை.
வசிகனெண் மகவென முறையிற் செறிந்தனை.
பதகன்வன் பிழைமுழு வதுமுண் மறந்தனை.
பசுபதி யெனுமுயர் பெயரிற் சிறந்தனை.

(இவை நான்கும் நாற்சீரோரடி அம்போதரங்கம்.)

அனிலவொண் பதியு நீ; அனகசிற் பரனு நீ
புனிதமெய்த் தவனு நீ; புகழ்கொள்சற் குருவு நீ
பனிவரைக் குறவு நீ; பழமறைப் பொருளு நீ
முனிவரர்க் கிறையு நீ; முழுமுதற் பரமு நீ.

(இவை எட்டும் முச்சீரோரடி அம்போதரங்கம்.)

மலைய முத்தினை; கலைவ முத்தினை
மழுவி ரித்தனை; கழுவெ ரித்தனை
அலைய டுத்தனை; வலையெ டுத்தனை
அணிகள் சொற்றனை; மணிகள் விற்றனை.

(இவை எட்டும் இருசீரோரடி அம்போதரங்கம்.)

என வாங்கு.

(இது தனிச்சொல்.)

பத்தர்க ளனுதினம் பரவிப் பணியுஞ்
சுத்த நிராமய சுமங்கல விசேட
இக்கு மிகவிரும் பிபமுகத் திறைக்குக்
கொக்குக் கனியுணக் கொடுத்த குணகர
உயர் * கிர வுஞ்ச முடைபட வடலுறு
மயில்விடுத் திசைபெறு மறுமுகர்க் கத்த
அஞ்சா தகங்கொண் டணைந்தமுப் புரத்தை
எஞ்சா தழித்த வெரிநகைப் பகவ
மருளறு சுந்தரர் வண்பா டற்கிடங்
கருடன் மதலையைக் கான்றிடப் புரிந்தவ
நாரையுட் கொண்டு நற்பூசை யுஞற்றிய
சீருலா மிருகண்டு சேய்க்கரு ளனக
கெடித்தலப் பெருங்கோ கிலமறப் பிரம்பா
லடித்த வடித்தழும் பமர்திரு மேனிய
தாமுணர் பரிதிநேர் சக்கிரத் தாற்சலந்
தரன்றனைத் தடிந்த சங்க்ராம வித்தக
விதிதலை யைக்கிளி மேதகு மலர்க்கரத்
ததிசய முறவேந் தனுதியாந் தேவ
காவி மலர்நிகர் கருங்கணு ரவாவும்
பூவிருக் குங்குழற் பூங்கோதை நாயக
மாகாள கண்ட வளர்கரு ணலைய

* கிரவுஞ்சம் - அன்றில் பக்ஷி.

சீகா ளத்தித் திருத்தல மேவா
வலிமைப் பிரபஞ்ச மாயையா னயங்கி
நிலைதளர்ந் துளத்து ணொடிந்து வருந்திநின்
சரணார விந்தமே தஞ்சமென் றடைந்தனன்
அரணார் பூந்தடத் தந்தண் மலரிடைச்
சுரும்பார் தேன்பெற் றமைந்தெனப்
பெரும்பே ரின்பம் பெறுதற் பொருட்டே. (க)

(இது இருபத்தெட்டடியால்வந்த நேரிசை யாசிரியச் சுரிதகம்.)

நேரிசைவெண்பா.

பொருளுணரா நாயேன்றன் புன்மைதவிர்த் தாளுப்
பொருளுணர்த்தி யாட்கொள் புனிதா—தெருணிறைந்த
கங்கரா கங்கா கவினுறச்சேர் காளத்திச்
சங்கரா கங்கா தரா. (உ)

கட்டளைக்கலித்துறை.

நாரா தல மேத்துநற் காளத்தி நாதர் தவாதவொண்சீர்ப்
புராதனர் வேதா கமங்க ளுரைத்தமெய்ப் புங்கவர்வா
ளராதரக் கையினிற் கங்கண மாக வணிந்தவர்வெங்
கிராதற்கு மாமுத்தி தந்தவர் நந்துணை கேடினெஞ்சே. (ங)

நற்றயிரங்கல்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சேலன்ன விழிமடவார் மயர்வுறவே வலைகூடற்
றெருவில் விற்ற
பாலன்ன வடிவமுறும் பரமரே காளத்திப்
பகவ னாரே
ஆலன்ன வெணதுசிறு வயிற்றுதித்த மிக்கெழிலா
ரணங்க னுடன்
மாலன்ன தகலவின்னே வந்தணையின் யானுமிவண்
வாழ்கு வேனே. (ச)

## மடக்கு.

### கட்டளைக் கலிப்பா.

வேளைத் தீய்ந்த நுதனெருப் பக்கமே
மெய்யி னங்கைக் களித்ததோர் பக்கமே
தாளி ணைக்கிணை யாமர விந்தமே
சடையி னேற்றது சாரர விந்தமே
தோளிற் கொண்டது பூந்தண் மதலையே
தொண்ட ஞரிட வுண்டார் மதலையே
நாளும் வண்மையில் வண்டர்கா ளத்தியே
நம்பர் வாழ்வு நலஞ்செய்கா ளத்தியே. (௫)

### நேரிசை வெண்பா.

* காளக் கடாவினில்வெங் காளச்ச ரீரநமன்
காளமொடு பாசங் கரத்தேந்திக்—காளம்போல்
வந்தக்கா லென்ன வகைசொல்வே னீதுணைசெய்
சந்தக்கா ளத்திவர தா. (௬)

### எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வரியளிப் பொதும்பர் சுலவு காளத்தி
வரையிட முறையுமெம் பெருமான்
கிரியரு மருமா னெனச்சொல வுமைபாற்
கிட்டுமெய்க் கல்விமா னெனும்பூந்
தெரியலார் சேர மான்புக லுலாவிற்
திருவுளங் கொளுமதி மானே
டரியசைம் மானுஞ் சமர்செயா வண்ண
மறுகுநீர் தரவகத் தெணுமே. (௭)

### கலிவிருத்தம்.

எண்ணூறு மெண்ணூறு மியனெய் போற்புவிக்
கண்ணூறு நெடியகா ளத்தி நாதரைப்

* காளம் - கருமை, மேகம், சூலம், நஞ்சு.

# சீகாளத்திக்கலம்பகம்.

யண்ணுறு பாடலிற் பாடி யாடுவார்
நண்ணுறு விண்ணினி னலஞ்சு கிப்பரே.

## புயவகுப்பு.

### ஆசிரிய வண்ண விருத்தம்.

### சந்தக்குழிப்பு.

தனன தனனதன தானத் தனனதன
தன்ன தனனதன தனனத் தனந்தன.

சுருதி நிலையுணரு ஞானத் தபோதனர்கள்
சுசிகொ டிருமுறைக ளணியக் கிளர்ந்தன
சுடிகை மணிபெறுவி யாளத் தையேதுவொடு
சுலவு கடகமென வளையப் பொருந்தின
சுரர்கண் மகிழ்வினொடு வாழக் குரோதமகல்
சுகிர்த வபயகர முதவப் பரிந்தன
சுடுகை யமணர்கொடும் யாகத் தியானைமுடி
சுடர்செய் கணையடரு * நிலையிற் கடிந்தன

மருவு மலரிமரை சாதித் தமாலமகிழ்
மதலை குரவுதொடை புனையத் துதைந்தன
மறம தில்குநர கேசித் † தராகிருத
மடிய வுகிர்கள்கொடு கிளறச் சினந்தன
மதுரை மறுகிலுயர் மாணிக் கமாமணியின்
மகிமை சொலியவைக ளுதவச் செறிந்தன
மயல்செய் புரமழிய மேருத் தராதரமு
மலைவில் சிலையதென வளையத் திணிந்தன

தருண வெயிலுமிழு மோர்பத் மராகமணி
தகள மணிவலய மிலகப் புனைந்தன
தகைகொண் மலையுதவு கோலக் குமாரியணி
தரும குடமுலைக டழுவத் தழைந்தன

---

* நிலை - தொழில். † தராகிருதம் - தீத்தொழில்.

தவறி லவிர்கிரண வாதித் துணர்தமது
தசன நிரைமுழுது முதிரத் தடிந்தன
தனுவில் வலவனெனும் * வீபற் சுநேயமுறு
தரம தொளிர்பகழி தருதற் கிசைந்தன

கருது பனவர்குல மேவச் சிரோமணிமுன்
கமழு முணவதிட வளவிப் பிசைந்தன
கனிவொ டொருதருமி யோதிப் பொனுசைசொல
கவலை யகல்கிழிய துதவிச் சிறந்தன
கதிர்செய் விழிதருமவ் வேடப் பிராணியல்கொள்
கணிச வணிகைமலர் கதுவத் தொடங்கின
கருணை திகழ்புனிதர் காளத் திநாதரணி
கலன தொளிருனத களபப் புயங்களே. (க)

## இயமகம்.

### கட்டளைக் கலித்துறை.

புயங்கந் திரிகட மாதங்க மிக்கன்பு பூண்டெல்லம்
புயங்கவி ஞர்பதம் பூசிக்க வந்தருள் பொன்முலைவார்
† புயங்கனை பாகனைக் காளத்தி நாதனைப் பூதனையெண்
புயங்கடுக் கைத்தார் புனைந்தானைப் பாவலிர் போற்றுவிரே. (க0)

## நிந்தாஸ்துதி.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

போர்விசயன் வில்லடியுஞ் சாக்கியனூர் கல்லடியும்
புளினர் கோமான்
பேர்வருகாற் செருப்படியு நணிபடவே மேற்பட்டீர்
பெருங்க லேந்திச்

* வீபற்சு - அருச்சுனன். † புய் - புய்க்கும்படியான; புய்த்தல் - பிறல்.

சீர்வதிவில் லாய்வளைத்தீ ரென்பதுவும் பொய்யோபின்
றிடனற் றீரோ
பார்வசையல் லாதுபுக ழாங்கொலேர் காளத்திப்
பகவ ஞரே. (௧௧)

### கீரையார்.

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பரவு மடியார் வினைதவிர்க்கும்
பரன்கா ளத்தி நகர்த்தெருவில்
உருவண் கீரை வாங்குபவ
ருண்டோ வெனக்கூ வொண்டொடியாய்
மருவும் வளைக்கை கொடுகலவை
வையின் பாலா முன்னையுந்தா
கருது * பண்ணை சேர்பொன்னுங்
காணி தருதுங் கொள்ளுவையே. (௧௨)

### வலைச்சியார்.

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வையகஞ்சொல் காளத்தி நகர்க்கண் மேலை
மறுகினின்மீன் விற்கவந்த வலைச்சி யாரே
செய்யகுக னறுமீன்கா தலன்று னென்றான்
சிவன்வலைகொண் டன்றுசுறா மீன்பி டித்தான்
பொய்யகன்ற குருமீன்று னுயர்வீ டென்றான்
புகலவன்சி டனுக்குஞெண்டின் மிக்க விச்சை
கையுறவே வடமீனை வசிட்டன் கொண்டான்
காசினிக்கண் மீன்சையெவ் வெவர்க்கு முண்டே. (௧௩)

### இதுவுமது.

உண்கணு மொளிர்சேலை யெடுத்துக் காட்டி
யுளமலங்கு வகைதிருக்கைக் கெளிறு காட்டி

---

* பண்ணை - சமுசாரம்.

வண்கணைக்கால் வரால்காட்டி நடக்க மாலா
    வார்தொடர வேள்கருப்பஞ் சிலையெ டுப்பான்
கொண்கனுக் காளத்தி வரனைக் கூடிக்
    குலவியமோ கினிமாதின் குணங்கை யாண்ட
பெண்களினும் போல்வசிய சாலங் கற்ற
    பேர்களையாங் கண்டறியேம் பிரிய மாதே. (கச)

கட்டளைக் கலித்துறை.

மாவித் தகர்பலர் சூழ்திருக் கூட்ட மதித்துளன்பு
பாவித்தக் கத்தி னெடுநீ றணிந்துநின் பங்கயத்தாள்
சேவித் தனுதினஞ் சிந்திக்கி லேனென்ன செய்குவன்பூங்
காவித் தடம்பொழில் சேர்திருக் காளத்திக் கண்ணுதலே. (ரு)

நேரிசை வெண்பா.

கன்மடமா னுக்கழலிற் கண்டவனு முண்டகனு
மன்மகா தெய்வமென வாழ்த்துதல்செய்—பொன்முகரி
யாறுகாட் டுந்திருக்கா ளத்தி வரைத்தெய்வம்
பேறுகாட் டும்மெய் பெரிது. (கசு)

கட்டளைக் கலித்துறை.

பெரியா ருரைக்கு நெறிநின்று வஞ்சகப் பேய்கடம்பாற்
றிரியாதெஞ் ஞான்றும் பசித்துவந் தோருண்ணச் செய்துமத்த
கரியானை யீருரி போர்த்தநற் காளத்திக் கண்ணுதலைப்
பிரியாது ளத்திற்சிந் தித்திருப் பின்முத்திப் பேறுறுமே. (கஎ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பூத்திருக்குங் கரிக்கோட்டு முலைமடவார் தம்முடனே
    முயங்க நாடும்
வித்திருக்கு மடநெஞ்சப் பேயனேன் மருளாய்
    பேண லென்றே

ஈத்திருக்கு மலர்க்கரத்தா னளினத்தான் கரங்கூப்பி
நயந்து போற்றுங்
கொத்திருக்கும் பூம்பொழில்சூழ் காளத்திப் பதிமேவுங்
குழக னூரே. (கஅ)

கலிவிருத்தம்.

குமுதமு நளினமுங் குலவு பூஞ்சுனை
யமைவொடு பலவுறு மணிகொள் காளத்தி
விமலவொண் டிருப்பணி விளங்கச் செய்குவோ
ரமைய மகன்றுபே ரின்ப மேற்பரே. (கக)

ஊர் சிலேடை.

நேரிசை வெண்பா.

ரம்பரநே ரும்முலையார் பார்வையிடை மாதவர்வாக்
* கம்பரங்காட் டுஞ்சீகா ளத்தியே—வெம்புகைநேர்
கூற்றுக் கொடியார் குவலயமுன் டாமரைவா
யேற்றுக் கொடியா ரிடம். (உ0)

விறலுந்தரம்.

நேரிசை வெண்பா.

இடமார்சீர் வள்ளலிலோ ரேந்தலும்வெண் சோறும்
மடவார் நிறையும் வயினுந்—தடநாக
நரிசார் காளத்தி நம்பரன்பா கேளுயர்பூம்
பாரிசா தங்கற் பகம். (உக)

அம்மானை.

கலித்தாழிசை.

கற்றோர்க ளேத்துதிருக் காளத்தி யீச்சுரனார்
வற்றாப் பெருங்கடல்போன் மாகிதியா ரம்மானை
வற்றாப் பெருங்கடல்போன் மாகிதியா ராமாயின்
பற்றும ணேற்றடியும் பட்டதே னம்மானை
பதியேழை யாளெனமேற் பட்டனர்கா ணம்மானை. (உஉ)

* அம்பரம் = கடல், ஆகாயம்; அம் = அழகு; பரம் - மோக்ஷம்.

## இரங்கல்.

### மடக்குத்தாழிசை.

மான்கைபற்றின ரெனதுமெய்த்தவ மான்கைபற்றிலர் கூடலில்
வளைகணோர்ந்தவர் கனகமாமணி வளைகணோர்ந்திலர் சேரர்தங்
கோன்கொளக்கவி மாலைதந்தவர் கொன்றைமாலைகை தந்திலர்
கொம்பர்யானைமுன் வந்தணைந்தவர் கொங்கையானைய ணைந்திலர்
வான்குலாவமு தங்கொடுத்தவர் வாயினூறமு தங்கொடார்
வாரிநீரற வேசெய்தார்மிக வடிகணீரற வேசெயார்
நான்கறத்தவ ருய்யவீந்தவர் நங்கையாருய வீந்திலர்
நாகொளத்தி நாதரிங்கன டத்துநீதிய நீதியே. (உந)

### வஞ்சித்துறை.

நீதர்கா ளத்திவாழ்
நாதர்சீ ரார்சர
ணோதுமெய்ப் பத்தர்க
டூதுதீர்ந் துய்வரால். (உச)

## சுவடுகண்டிரங்கல்.

### கட்டளைக் கலித்துறை.

ஆலடி வைகிய காளத்தி நாதர்த மக்கினிக்கண்
போலடி யைச்சுடும் பாலையிற் புல்லின்ம ருண்டுசென்மான்
சாலடி யாங்கது தோலடி யாமிவை சார்செம்மலின்
காலடி யாமவை யீதுநம் மாதின் கவினடியே. (உரு)

### கொச்சகக்கலிப்பா.

கல்விநலந் தோராக் கசடர்கடம் வாயினின்று
பல்விதமுஞ் சொல்லிப் பரிதவிக்க வையாமல்
வல்வினையை நீக்கி வளம்பெறச்செய் மாரன்றன்
வில்வினையும் பண்ணை வியன்காளத் திப்பரனே. (உசு)

நேரிசை வெண்பா.

பாமன்கா ளத்திமலைப் பாங்கருறைந் தோங்கு
மரிவைகண் கண்டுமெருண் டார்மா—னிருவிசும்பி
லொன்றம் புலிதன்பா லோடியாள் வாயபய
மென்றெருட்டி மேவுறுமெய் யே. (உஎ)

குறள்வெண்செந்துறை.

மெய்யன் புடையோர் விழைகா ளத்தி
யையன் கழலுக் ககமாம் பூவே. (உஅ)

கட்டளைக்கலித்துறை.

பூபாலர் சித்தமும் வாழ்த்துமொண் காளத்திப் புண்ணியனைக்
காபாலங் கைக்கொண்ட கம்பீர னைக்கொன்றைக் கண்ணியனை
மாபா லனநிறை லாவண் ணியனை வழுத்துமன்பர்
கோபால மாதி யுறுப்புற் றிறையுருக் கொள்ளுவரே. (உகூ)

மேகவிடுதூது.

நேரிசை வெண்பா.

கொண்டல்கா ளும்போற் குறித்தபரு வத்துதவி
மண்டலத்திற் செய்குவோர் மற்றெவர்தாம்—விண்டெனுமான்
மேவிவருங் காளத்தி வித்தகரோ டெற்சேர்த்திங்
காவிசிறக்கச் செய்யி னறம். (௩௦)

சம்பிரதம்.

பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டமெண் டிங்கடமை முட்டையாக் கொண்டுசெண்
டாடிவல் லமைதெரிப்போம்
அவிருமெழு கடலையுள் ளங்கையின் மறைப்போ
மடர்ந்தகீ ரமுதாக்குவோம்
கண்டருங் கனலைப் பிழிந்துசா றூக்கிக்
கனிந்தினிய வாய்மடுப்போம்

கூடிகொள்கா வலரைவன் ஞரினிற் கட்டியே
கண்கணீர் பொழிய வைப்போம்
புண்டரீக மதனில்வெம் புண்டரீக மேறுமற்
புதமெவர்க் குங்காட்டுவோம்
புல்லையும் புலியாக்கு வோமெயிற் புலியையும்
பூனையிற் பொலியவைப்போம்
தொண்டனெ நம்பா லடுத்தசிறு வர்கள்செயுந்
தொழில்களிவை பூங்கோதைசேர்
தோளர்நங் காளத்தி நாதர்போல் வேறொரு
சொரூபமுங் காண்பிப்பமே. (௬௧)

## மறம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பேதகுசீர்க் காளத்தி மலைப்பு றத்தே
விறலொடுவாழ் மறவர்கள்யா மெம்மி டத்திற்
பேதமின்றி யரையன்விடு தூத னென்றும்
பிறங்குகும ரிக்காகத் திருமு கந்தா
னீதென்றுஞ் சுருளோலை யொன்றை யெம்மு
னெடுத்துவைத்த வொருதூதா வியம்பக் கேண்மெய்ப்
போதமென்ப திலையோநும் மரைய னுக்குப்
புத்திமுழுங் கான்மட்டோ புல்லன் ஞனே. (௬௨)

## இதுவுமது.

புல்லரையன் விருப்பத்தின் படியே நீதான்
போய்த்தேடித் திரிந்தலைந்தாற் காட்ட கத்தே
நல்லகும ரியுங்கிடைக்கு மணமு மெய்து
நவில்சோறும் பெறலாமேற் சுகமு முண்டாம்
செல்லுறுசீ காளத்தி வரையின் பாங்கர்ச்
செல்லாவா னும்மரையன் செயல்கள் யாவும்
வில்லம்பு கொண்டுசிறு ரெதிர்த்துக் கொல்வார்
மீண்டோடிச் சென்றிடினுன் வினைநன் காமே. (௬௩)

* புண்டரீகம் - கழுகு, புலி.

## தழை.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நங்கையா லிறைவர் தந்ததழை யீதென்றே
னரினக் கையா
லங்கேற்றுண் மகிழ்கூர்ந்தாள் கொங்கையின்மீ தணைத்தாள்கா
ரளகஞ் சேர்த்தாள் [த்துப்
பொங்கொளிசேர் கண்ணிலொற்றிக் கொண்டாண்மே லெடுத்தரை
பூசிக் கொண்டாள்
திங்கடவழ் காளத்தி வரைப்பெருமா னருளெனவே
சேவித் தாளே. (௩௪)

### நேரிசை வெண்பா.

சேவித்துப் பத்திரசந் தேங்க வடிவமுற்றும்
பாவித்து முத்திப் பயன்பெறுவோங்—கோவித்து
நீளத் திரிந்துழன்ற நெஞ்சமே வஞ்சமறக்
காளத்தி நாதரைநாங் கண்டு. (௩௫)

### வஞ்சிவிருத்தம்.

கண்ட முச்சுடர் கண்களாக்
கொண்ட காளத்திக் கோன்பதப்
புண்ட ரீகப் பொலன்மலர்
தொண்ட ராம்வரி சூழுமே. (௩௬)

### நேரிசை வெண்பா.

சூழ்செஞ் சடிலமிசை தும்பைமலர் வைத்தபிரான்
காழெயினன் கண்ணப்பக் கண்டபிரான்—தாழ்வதின்றி
யாளத் திருநடன மம்பலத்திற் செய்தபிரான்
காளத்தி மேவுபிரான் காண். (௩௭)

## துயிற்பயிற்று.

### நேரிசைவெண்பா.

காளகண்ட மென்றொருபேர் கண்டகுயி லேவயமோர்
காளகண்டன் வந்தானென் காளத்தி—யாளுமகா
தேவன்வந்தான் ஞானபர தேசிகன்வந் தானென்றே
காவினின்று கூவுவைவா காய். (ந அ)

## இடைச்சியார்.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

காலேவா தொளிர்திருக்கா ளத்திநகர் மேற்றெருக்கட்
காமர் வாய்ப்பப்
பாலோபா லெனக்கூவு மணிசேர்சிற் றிடைச்சீர்நும்
பால்கொள் வார்க்குச்
சாலோரும் பசித்தழல தவிக்குமென்றீர் வெங்காமத்
தழல விப்பின்
மேலோது முளங்களிப்பப் பெறுவேநும் பாற்குடத்தை
விரைவிற் றேனே. (ந கூ)

## மதங்கியார்.

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வீரதவித் தகர்கணின தெழிலாற் காம
வெறிபிடித்துத் தண்டையந்தா டஞ்ச மென்றே
பாரதவித்து ழுழலக்கா ளத்தி யாஞ்சீர்ப்
பதிக்கணு டிப்பாடு மதங்கி யாரே
சுரதவித்தை வல்லவளென் றுங்கை வாளுந்
துணைவிழியா மைவாளுஞ் சொல்லு மென்றே
சரதவித்து வான்கண்மகிழ்ந் துரைப்ப ரென்னிற்
சாற்றுவதற் கரிதாநுஞ் சமர்த்துத் தானே. (ச 0

## கட்டளைக்கலித்துறை.

சம்போ சிவசங் கரதேவ தேவ தயாளவென்று
ணம்போ ருகத்தா ளிறைஞ்சிடு வார்க்கு மறிவதில்லா
வெம்போ லியர்க்கு மிரங்குவ துன்ற னியற்கையன்றோ
கும்பா தயமுனி யேத்துறுங் காளத்திக் கொற்றவனே. (சக)

## இரங்கல்.

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வரமேதந் தாட்கொள்ளுஞ் சீகாளத் திப்பரமர்
மலைநாட் டின்க
ணுரமேவ வந்தணைந்த கண்ணுா ரன்றுரைத்த
வுறுதி யாமுத்
தரமேயென் னுளத்தெண்ணி வரவுபார்த் திருந்தேன்சொற்
றவிர்ந்து விட்டார்
திரமேயில் லாதவர்க ளென்பெறுவார் கிளியினங்காள்
செப்பு வீரே. (சஉ)

### இதுவுமது.

வீங்கோதைக் கடலுலகர் விண்ணுலகர் புகழ்வள்ளல்
மிகுஞ்சிறு முசுந்
தேங்கோதைக் கண்ணியன்சீ காளத்திப் பரனிமயச்
செல்வி ஞானப்
பூங்கோதை நாயகன்மீ திவள் கொண்ட மோகமது
பொருந்து மென்றல்
பாங்கோதை யலர்க்கழகோ நேரிங்ஙு னுரைப்ப தெல்லாம்
பயன்வ ராதே. (சஙு)

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வரமேவு முனிவரர்க ளிதம்புகழ்கா ளத்தியான்
வார்ச டைக்கட்

பரமேவு மம்புலியு மிடைக்கண்மக வெம்புலியும்
பரிந்திருக்க
வரமேவு கோட்புலியுஞ் சிறப்புலியுந் தாளடைந்த
வுறுதியாலே
தரமேவும் பொதுநாடி யோர்புலிகாத் திருப்பதுநேர்
சாரத்தானே. (௪௪)

கலிநிலைத்துறை.

சாரதை கேள்வன் றுபமொழித்த தகையாளர்
* தூரியர் காளத் தீசர்ப தத்தைத் தொழுவீரேற்
பாரிநன் மக்க ளாதியர் சுற்றம் பலர்சூழ
வாரியை நேர்சீர் பேவிந லாயுளும் வளர்வீரே. (௪௫)

வண்டுவிடுதூது.

நேரிசைவெண்பா.

வண்டேகா ளத்தி வரைப்பிரான் வீதிவரக்
கண்டுமயல் கொண்டுட் கலங்குகின்றேன்—செண்டுநிக
ரெந்தனதொ டுங்கச்சேர்ந் தின்பந் தரச்செய்வாய்
வந்தனங்காண் டூன்பூ மணம். (௪௬)

கட்டளைக்கலித்துறை.

மணமே யிலாவெவ் வெருக்கலர் கள்ளி மலர்களைப்போற்
குணமே யொருசிறி தேனும் பெறுத்துட்டர் கூட்டமொன்றிப்
பணமே பரமென் றலைநாயி னேற்கருள் பாலிப்பையோ
வணமேவு மீர னிடர்தீர்த்த காளத்தி மாதவனே. (௪௭)

நேரிசை வெண்பா.

மாதவனுந் திச்சீர் மதலை தொழுமதலைக்
கோதையன்கா ளத்திக் குவட்டிடத்திம்—மாதின்றோள்
வேய்விழிநீ லம்பன் மிளிர்முத் ததரமுருக்
கேய்கொங்கை வேண்மகுட மே. (௪௮)

---

* தூரியர்-கடவுள், இடையர்கனர்.

கொச்சகக் கலிப்பா.

மண்ணளந்த மால்விடைமேல் வந்தன்பர்க் கருள்புரியுங்
கண்ணளந்த காளத்திக் கடவுளுறை வரைசூழ்ந்த
தண்ணளந்த பொழிலின்மயிற் சாயலா டொனிகேட்ட
பண்ணளந்த சுரும்பரறு பதமாகி யகலாவே. (சக)

நேரிசைவெண்பா.

அடியரினங் கூட்டி மகிழ்ச்சையெலா மோட்டுங்
கடினமற வீட்டின்பங் காட்டும்—வடிவமொளிர்
துப்பனார் வேதந் துதிக்குஞ்சீ காளத்தி
யப்பனார் மெய்த்தண் ணருள். (ரு0)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருள்விரவு மலர்க்கண்ணு மதிமுகமுஞ் செஞ்சடையு
மலிர்செவ் வாயும்
பிரசம்வழி பூமதலைப் பூங்கோதை சேர்புயமும்
பிறங்கு மார்பும்
பரசொடுமா னொளிர்கரமும் விளங்குதிருக் காளத்திப்
பரனென் றோதுங்
கரிசகல்சற் குருநாதன் சரணார விந்தமுமென்
கணினீங் காவே. (ருக)

நேரிசை வெண்பா.

காலன் றனையுதைத்த கஞ்சத்தா ளெங்கோனைக்
கோலமுயர் ஞானப்பூங் கோதைமன்னைத்—தோலுரத்தோல்
மாகலிங்க மாக வனைந்தொளிருங் காளத்தி
நாகலிங்க மாகனையுண் ணுடு. (ருஉ)

கலிநிலைத்துறை.

நாடுபொன் முகரியென் றோதுநன் னதியினி னனைவேனே
பூடணச் சிவமணி மாலைவெண் பொடியொயிற் புனைவேனே
மாடுயர் மதிலுறு கோயிலை நனிவலம் வனைவேனே
நீடுரு டருதிருக் காளத்தி யிறைபத நினைவேனே. (ருங)

## கட்டளைக்கலித்துறை.

நினைத்தண் கடல்பெறு நற்பிள்ளை யென்றென்ற னெஞ்சிலுன்னச்
சினத்தங் கசனுடன் சேர்ந்தழும் பேமிகச் செய்கின்றனை
யினைத்தினுக் கும்முத லாவுள்ள காளத்தி யாண்டவர்தாந்
தினைத்துணை யும்பொறுக் கார்குரங் கேவருந் தீங்குனக்கே. (௫௪)

## நேரிசை வெண்பா.

தீங்கல் விடமுண்டு சேரமர மாதருக்கு
மாங்கல்ய மீந்த மகதேவா—வோங்கலுமை
நாயகா நாயே னலிவகற்றி யாண்டருள்செய்
சேயகா ளத்தியர சே. (௫௫)

## கட்டளைக்கலித்துறை.

அருணா யிறுமதி செவ்வாய் புதனெண் வியாழநற்சுக்
கிரன்வெஞ் சனியிரு பாம்பா மிராகுகே தென்றுரைசெ
யொருநவக் கோட்களின் வேதையுந் தாழுமொன் றொரொம்மலுங்
கரிசறக் கண்பார்த் தருடருக் காளத்திக் கற்பகமே. (௫௬)

## சிந்து.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பகருங்கா ளத்திவரைத் தேசிகன்ற னருள்பெற்ற
பன்னொன் சித்தர்
ககனசித்த னென்றுரைப்பா ரிரும்பையெலா நாகமதாக்
காட்டிப் பின்னர்
திகழுறவா னவர்மேவப் பொன்னுடாச் செய்துவைத்தோஞ்
சேர்கூழ் போது
மிகழ்வடையோ மடுத்தவரு மாசைகொள்வார் குறைவில்லை
யென்றுங் காணே. (௫௭)

## நேரிசை வெண்பா.

காண வரிதெயினக் கண்ணப்பர் மிச்சிலூன்
தானுவுண் டின்பமுத்தி தந்திட்ட—மாணிதவென்
றன்பருரை தென்கயிலை யாங்காளத் திப்பதியை
யின்பமுறக் கண்டவர்கட் கீடு. (௫௮)

## நிந்தாஸ்துதி.

### தாய்க்கூற்று.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சுட்டுக்கொவ் வாதநலே யோட்டிவிரந் திட்டான்சீ
ரியைந்த பாண்டி
நாட்டுள்வைகை மண்சுமந்தா னடிபட்டான் காளத்தி
நகர்க்க ணுற்றான்
காட்டெயின னெச்சிலுண்டு கண்பறித்த தீக்கண்ணன்
காசுப் பைமேற்
போட்டெங்குந் திரிவானன் னவன்காதன் மின்னேநீ
பூணல் வீணே. (ருகூ)

### பாண்.

கொச்சகக்கலிப்பா.

வீணை டவர்சளொடு மெல்லியர்கள் சேர்ந்தணையப்
பாணநீ தாது படிந்தூறலா பாசமதாஞ்
சேணார்கா ளத்திவரைத் தேவனு ரன்பர்முறை
மாணாரும் வீணையினில் வைத்திசையுண் டாந்திருவே. (சுo)

### நற்றாயிரங்கல்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருமாறெண் படிசமா னும்படிவந் திகழ்ந்துவளர்
செழுமான் போற்றுங்
குருமான்மெய்ஞ் ஞானப்பூங் கோதைமா றெடுகுலவுங்
கோமா னேயான்
தருமானின் மயல்கொண்டு மதன்சரத்திற் காற்றுமற்
றருகா ளத்திப்
பெருமானே யெனக்கண்ணீர் பெருக்குகின்று ளணைந்துசுகம்
பெறக்கண் பாரே. (சுக)

ஒருவிகற்ப நேரிசைவெண்பா.

பாவிற்குட் டேவர் பகர்செந் தமிழ்க்குறட்பா
காவிற்குட் கற்பகப்பூங் காவாமே—தூவைக்கொ
ளாவிற் கருமுனியா வன்பிற்குக் கண்ணப்பர்
தேவிற்குட் காளத்தித் தே. (சுஉ)

குறள்வெண்பா.

காளத்தி நாதன் கழற்கன்பு செய்மனனே
* கோளத்தி யோடுங் குலைந்து. (சுங)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குமரனைப் பொருளென் றுருங் குவலய மிருளென் றுரு
மமர்மழு வேந்தி ஞரு மாலத்தை மாந்தி ஞரு
மமதையைப் பிரியன் றுரு மாமறை பரியன் றுரும்
† கமையுயர் போத ஞருங் காளத்தி நாத ஞரே. (சுச)

கிள்ளைவிடுதூது.

கட்டளைக் கலித்துறை.

நாதஞ் செறிசங்கஞ் சூழ்வயற் காளத்தி நாதர்தம்பாற்
சூதக் குயிலைமுன் றூதுவிட் டேனது சூதுமுற்றுப்
பேதகஞ் செய்தது நீயப் படிக்கலை பேசியென்னை
யாதரந் தோடனை யச்செய்யின் பேர்வரு மஞ்சுகமே. (சுரு)

துறை.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சுகம்விரவு தக்கிணகை லாச மேவுஞ்
சுந்தரனு ரருள்பெற்ற பூங்கு றத்தி
சகமதனி லுயரிசைசேர்ந் தோங்குங் கண்ண
சயசாலி மகிழுருஞ் சுனனென் போலும்

* கோள் நவக்கிரகம். † கமை பொறுமை. போதன்-ஞானசொரூபி.

பகாரிய குறத்தியுருத் தாங்கிக் கூடை
பங்கயக்கை யாலணைத்துப் பலனுஞ் சொல்லி
யிகலறவோ ரொண்டொடிக்கை யிசையப் பெற்ற
தெவரறியா ரெங்குறியிங் கியம்பக் கேளே. (௬௫)

## இருவமது.

கேளம்மே யிருநாழி நெல்லுந் தூசுங்
கிட்டவைத்தே யிருந்தானன் வலக்கை நீட்டுங்
கேளனமா வெண்ணாதே யாசை கொண்ட
வெழிலாளர் காளத்தி நாத ரன்றே
நாளையே வந்தணைந்துன் மயலைத் தீர்ப்பார்
நல்லவோ ராண்பிள்ளை பிறக்கு மெய்யார்
மீளியா மப்பிள்ளை வேல னென்றே
வியன்பேர்கொண் டோங்குவான் மெய்ச்சம் பாரே. ()

## பிச்சியார்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மெய்ச்சியா ரணங்கள் போற்றும்
விரைமலர்ப் பதத்தார் வேதத்
துச்சியார் சீகா ளத்தி
யும்பனார் நாட்டி டத்தே
பிச்சியார் குழலுஞ் செல்போற்
பிறழுநும் விழியுங் காணி
னிச்சியா ரெவர்தா நூல்போ
லிடையுடைப் பிச்சி யாரே. (௬௮)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பிச்சாடன ராகிக்கெரு விச்சார்மலை கொண்டீர்
பித்தாவெனு மத்தாயர டுத்தேவர வென்றீர்
பொச்சாப்பகன் மச்சானையண் மெய்ச்சாதெரு தென்றீர்
பொற்பாரெயி னக்காளைத ரத்தூத்தசை தின்றீர்

மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர்

விச்சாதரர் சொற்காமுறு நற்காளத்தி நின்றீர்
மெய்ப்போதவி டைக்காடன்பி னெய்ப்பாடுபு சென்றீ
ரெச்சால்புமி லாமத்தனை பச்சாத்தப மொன்றி
யெப்போதுவந் தருள்செய்குவீர் முப்பார்தொழும் பரரே. (சுக)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பருணிதருளத்த டத்திற் பதுமம்போ
லலர்ந்து ளாரு
மருணிறை யுமைக் கறத்தி ஞெறிமுழுக்
கறிவித் தாருந்
தெருணிக மாக மத்தின் செல்வமாத்
திகழ்ந்துற் றாருங்
கருணைக்கோர் கடலன் னாருங் காளத்தித்
தலைவ ரே. (எ0)

தவம்.

நேரிசை வெண்பா.

தருந்தவத்த ரென்னத் தடமலைகாண் மேவி
யிருந்தவத்தை யுற்றலைய வேண்டா—முருந்தவத்த
னுந்திவந்தோ னோது முயர்காளத் திப்பதியை
வந்தித்தன் மாதவமா மா. (எக)

மடக்கு.

கட்டளைக்கலிப்பா.

அஞ்செழுத் தனை சாரம்பம் பாதியே
யமலைக் கீந்த தவிருடற் பாதியே
வெஞ்ச மர்த்தனு மேருவே தண்டமே
மிக்க தந்திரத் தந்தமே தண்டமே
மஞ்சு மானக்கஞ் சாறர்பா லோதியே
மாம ணத்தி னிறைகொண்ட சோதியே
பஞ்ச பூதத் தலத்துளொன் றானதே
பாந்த ளத்திப் பதியிலொன் றானதே. (எஉ)

## களி.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆலத்தை யுண்டமரர்க் கமுத ளித்தங்
காண்ட திருக் காளத்தி யப்பன் றூட்சேர்
தாலத்திற் பாடிவருங் களியர் யாஞ்சொல்
சங்கதிகள் கேளப்பா வாண்பெண் கூடிக்
காலத்தில் யோனியின்வாய் வந்தி டாமே
கலயத்திற் பிறந்தோன்வெண் கல்லிற் சம்பு
பாலத்துக் கண்ணொன்றிற் பிறந்த சேயைப்
பகர் * முறத்திற் பிறந்தவெங்கள் பரனென் றூனே. (எரு)

இதுவுமது.

பரிவாக விதுவுங்கேள் விந்தை யாமாற்
பாறியப் பெண்கொடுத்த மாமி யாரை
யுரிமையொடு மணேந்துபெருங் குடிய ஞறெ
ஞெருசாலுண் டிருகாலங் கற்றோ ஞை
வரியவுர காசுமிஃ தறியும் பொய்ச்சொ
லறிந்திடோ மெமக்குக்கண் மயக்க மில்லை
வரர்பரவுங் காளத்தி நாதர் தோள்சேர்
வஞ்சியைப்பூங் கோதையென வழுத்தல் சால்பே. (எசு)

இதுவுமது.

சாதியிலே யுயர்ந்தோர்பா மிருக்கச் சைவச்
சாதியென்று மாதிசைவ ரெனப்பேர் கொண்டு
நீதிசே ராரியர்தாம் பணிகள் செய்ய
நிட்களவ நாதிசைவச் சாதி தானென்
றோதியசீ காளத்தி யப்பன் பின்ன
ருண்டானு னதுவுமெச்சி லவன் குமாரன்
காதலுடன் சட்டியினிற் கொக்க வித்தான்
கண்கூடாக் கண்டவரைக் காண்பிப் போமே. (எஎ)

---

* முறம் - விசாகநக்ஷத்திரம்.

நேரிசை வெண்பா.

காளத்தி யின்னமுதாக் கண்டிட்கொண் டாண்டதெய்வக்
காளத்தி நாதா கனமேனகங்—காள
திரிசூல பாணியெனச் சிந்திப்பார்க் குண்டோ
பரிசூல கால பயம். (எசு)

கொச்சகக்கலிப்பா.

பஞ்சமமார் மேனி பசந்துள்ளம் வாடுகின்றேன்
வஞ்சகமா யென்னை மறந்திருத்தன் மாட்சிமையோ
கஞ்சமலர்க் கண்ணுமென் கண்ணுளா காதலித்தா
னிஞ்சியைமஞ் சாரு மெழிற்காளத் தித்தவனே. (எஎ)

நேரிசைவெண்பா.

தளர்ந்தவர்கட் கீயாத் தனமுநூன் மாட்சி
யளந்துணர்ந் தார்பா லளாவி - யுளந்திருந்தா
மாந்த ரறிவும் வரன்காளத் திப்போற்றார்
சாந்தமுமோர் பேறின்மை தாம். (எஅ)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இன்னறருங் கொடும்பிணியா லுள்ளம் வாடி
யிளைக்கின்றே னென்செய்வே னேழை யந்தோ
யுன்னியடி யிறைஞ்சுபவர்க் கருள்கா ளத்தி
யோங்கலில்வாழ் மருத்துவமா வாரி யாநீ
தன்னவனிவ் வடிமையெனத் திருவு ளத்திற்
சற்றெண்ணிற் பிணிக்குழாஞ் சலித்தி டாதிங்
கின்னமுந்தா னிருந்திடுமோ கடைக் கணித்தா
ளேறுமீக் கூறுனக்கிவ் விருதி லத்தே. (எகூ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

இருநாகஞ் செவிக்கணியாக் கொண்டதன்றிச் சிரங்கரமே
விடையி டத்தும்

பெருநாகஞ் சேர்த்துள்ளீர் முனிநாகங் காத்துளது
 பிறங்கும் பூசை
யொருநாகஞ் செயவினத்தாற் காளத்திப் பெயர்வாய்ந்த
 வூர்ப்பா னிருந்
திருநாக லிங்கரெனி லுமையஞ்சா தடுத்தெவர்தாஞ்
 சேவிப் பாரே. (௩௦)

## மேகவிடுதூது.

### நேரிசை வெண்பா.

பார்சொல் முகில்காள் பழமறைசொல் காளத்திப்
பேர்சொல் வரைப்பாற் பெருமான்முன்—னீர்சொல்லுஞ்
செப்போது மென்முலையாள் சேர்ந்தணைய நின்வரவுக்
கெப்போது நோக்குகின்று ளென்று. (௩௧)

### சவலை வெண்பா.

என்றூழ்பற் பேர்த்த விறைவ னிருடிமைந்தற்
கன்றா முகற்றுகா லாந்தகன்முன்
மாகாளத் திப்பரமன் மாமகிமை கண்டாரே
சாகாத மெய்ம்மா தவர்.  (௩௨)

## ஊசல்.

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

துகைபெறுநான் முகன்மாலும் வணங்கிப் போற்றச்
 சதமகனு தியவிபுதர் மலர்கள் தூற்றச்
சுகவாணி கமலாதி சசியா மாதர்
 சொல்லுறுசாம் பூனதப்பொன் வடந்தொட் டாட்ட
அகமகிழ்பல் வாத்தியங்கண் முழக்க மார்ப்ப
 வானந்த முடன்கவிஞர் விருது பாடத்
திகழ்ஞானப் பூங்கோதை யொருபான் மேவச்
 சீகாளத் திக்கரசே யாடிருசல். (௩௩

## பாங்கி தலைவன் வரவைத் தலைவிக் குணர்த்தல்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆடு மயிற் சாயலுறு மணங்கனையா ரிருவர்தமக்
கருள்செய் தாண்ட
நீடுபுக ழரனொரொண் டிருக்காளத் திப்பதிவாழ்
நேரி ழாய்கேள்
வாடுதனீத் துன்னங்களிகூர் மைக்கடலி லுதித்தபெரு
வலம்பு ரிச்சங்
கீடுபெறு நின்னன்பர் கொடித்தேரி லொலிக்கின்ற
திருவா னத்தே. (அ௫

### கார்காலம்.

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானமின்னி யறலேனி வழங்குங் காலம்
வளமல்கு பரிதியொளி மழுங்குங் காலம்
ஈனமறு முகைக்கள்குழா மிடையுங் காலம்
எண்டிசையும் பெருவாடை யெறியுங் காலம்
கோனனங்கன் மணக்கோலஞ் செய்யுங் காலம்
குயிலினந்தான் குரலெடுத்துக் கூவாக் காலம்
மானனையார் விரகத்தான் மறுகுங் காலம்
வண்காளத் திப்பரமர் மருவாக் காலம். (அ௬

### கைக்கிளை.

### மருட்பா.

காமர்மத னம்பு கடுக்கும் விழியிமைக்கும்
தேமலர்த்தார் வாடுந் திருநுதற்கட்—டாமவெயர்
வார்தலா லணங்கல ளிவள்
சீர்கா ளத்திச் சிலம்பவிர் மாதே. (அ௭

### உயிர்வருக்க மோனை.

நிலைமண்டிலவாசிரியப்பா.

அவிருல கெலாஞ்சொல் சிவபரஞ் சுடரை
ஆசற விளங்குப தேசசற் குருவை
இசைபெறு மறைமுடி மிசையுறு மாதியை
ஈனந்தம் போக்குபே ரானந்த மூர்த்தியை
உடுவினக் கவினூர்த மிடைமதி மதியினை
ஊனமென் றென்றுமில் ஞானவா ரிதியை
எவணமிக் கொளிரும் பவளா சலத்தை
ஏகமா நிறைந்தசி வோகமாம் பொருளை
ஐவகைக் கிர்த்தியஞ் செய்மாட் சிமையை
ஒலிகட னஞ்சுண் டிலகுநித் தியத்தை
ஓமெனுங் காளத்தி மாமலை மருந்தை
ஔவிய மறத்துதி செவ்வக னுறவே. (௮௭)

### சீர்பாதப் புகழ்ச்சி.

ஏழடிப்பஃறொடை வெண்பா.

வேளைத் தருமால் விழியொன் றமர்ந்ததுவு
நாளத்தொண் கஞ்ச னயந்தருச் சித்ததுவுந்
தாளத்த னப்பரவை தன்னி லுழன்றதுவு
நீளத்த போதனர்த நெஞ்சத் திருத்துவதும்
வாளொத்த கூற்றன் மடிய வுதைத்ததுவுங்
கோளைத் தெறுமன்றிற் கோநடஞ் செய்ததுவுங்
காளத்தி யப்பன் கழல். (௮௮)

### இனியவை.

கலிவிருத்தம்.

கல்லார்க் கறிவுறவே கற்பித் திடலினிதே
இல்லார்க் கியாதேனு மீந்தின் புறலினிதே
நல்லார் வலர்சொ னயந்தொழுக லினிதே
தொல்லார்கா ளத்திச் சுகனைத் தொழலினிதே. (௮௯)

நேரிசைவெண்பா.

இனமணிக ளார்கடற்பா ரிற்பொல்லா நாயேன்
வினையினுற் சால மெலிந்தே—னனைபோல்வந்
தாண்டருள்செய் காளத்தி யப்பனே சிற்சபையிற்
றாண்டவஞ்செய் தோங்கும்வா தா. (௩0)

கட்டளைக்கலித்துறை.

தாளத் தனம்பெறுந் தையலர் காமத் தளையிற்சிக்கி
மீளத் தவித்துழன் றேங்குநெஞ் சேயவர் நேயமெல்லாஞ்
சேளத்தட் டைத்தினு மாமா நிகர்க்குந் தொடர்பொழித்திங்
காளத் தருந்திருக் காளத்தி யப்பனுக் கன்புசெய்யே. (௩௧)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

செய்யனே சுடரார் முக்கட் டேவனே போற்றி மான்கொள்
கையனே கடனஞ் சுண்ட கண்டனே போற்றி விண்ணோ
ரையனே சடுக்கை யந்தா ரணிந்தவா போற்றி மாதார்
மெய்யனே சீகா ளத்தி வெற்பனே போற்றி போற்றி. (௩௨)

நேரிசை வெண்பா.

வெயில்வீசு நீண்மேரு வில்லான்சா வில்லான்
வியனூர்த ளூதுபுகழ் வில்லா—னியலார்பூங்
கோதையெனு மாது குலவில்லான் கற்றோர்சொல்
மேதைகா ளத்தி விபு. (௩௩

நேரிசைச் சிந்தியல் வெண்பா.

விபுதர்துதிக் கும்பெருமான் மெதகுநல் லன்பர்க்
கபயந் தரும்பெருமா னன்றிக்
காளத்திக் கும்பெருமான் காண். (௩௪

துயிலெ யிரத்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

காண்டீப தரற்கடல்சேர் பாசுபத மளித்தாண்ட
கடவுண் மேவு

நீண்டசீர்க் காளத்தி வரைசூழ்மாஞ் சோலையினி
னிளைந்து வாவி
யாண்டிலகுந் தளிர்கோதி யாப்பியஞ்செய் குயிற்பிள்ளா
யான்க ளிக்க
கோண்டரா தின்னேவா வாவென்றெ னன்பர்வரக்
கூவு வாயே. (௬௫)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கூரானைக் கிக்கருத்திக் கருத்தி லின்பங்
கூர்ந்தானை யண்டங்கள் கண்டு மாயை
சாரானைப் பற்பலவாஞ் சமயந் தோறுஞ்
சார்ந்தானை வெள்ளிக்கா லையிலோ ராழித்
தேரானைப் பற்றகர்த்து விண்ணோர் கூற்றுந்
தேர்ந்தானைச் சீர்வளருஞ் சீகா ளத்தி
யூரானை வையமுண்மால் விடையை யன்பா
யூர்ந்தானைப் பத்திசெய்யா ரொதிபோல் வாரே. (௬௬)

கலிவிருத்தம்.

வாவிநீ ரோடைகள் வகுத்து மாமணை
மேவுநந் தனங்களு மிகவைத் தர்ச்சனை
பாவனை யொடுசெயும் பத்தர் காளத்தித்
தேவர்தாட் பூவன்றிச் செகப்பூ மேவிடார். (௬௭

நேரிசை வெண்பா.

பூதப் படையான் புகழ்ந்துபா டன்பர்தமைச்
சாதப் படையான் சகத்துளவன்—கீதமிகப்
பாடும்வண் டார்புகன்மின் பங்கயன்மாற் கெட்டாத
கோடியர்கா ளத்திவரைக் கோ. (௬௮

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கோகனகந் தவழ்வயில்சூழ் காளத்தி நகர்மேவுங்
குழக னார்க்குக்

கோகனக னுரங்கீண்ட நெடுமாலு மடிமையிருட்
குழல்வெண் மேனிக்
கோகனக வாணிவளர் நாவயனு மடிமையெனிற்
குலவு மா * முக்
கோகனக முளவெவரு மடிமையெனற் கையமுண்டோ
குலமன் றோரே. (௯௯)

## இதுவுமது.

மண்ணப்பங் கிவளிவிண்ணு மைம்பூத மாகியென்றாழ்
மதியு மாகி
நண்ணப்பங் கயன்மாலு மறிவரிய பொருளாகி
நவின்மெய்ஞ் ஞானக்
கண்ணப்பற் கிரங்கியமா தேவான காளத்திக்
கடவு ளேமால்
வண்ணப்பம் பரமுலையார் மயனீக்கி முத்திநெறி
வழங்கு வாயே. (௧௦௦)

## வேறு.

ஏராருஞ் சீகாளத்தி மாதலத்தேவ ரீர்தம்
வாராரு மம்பு யத்தாள் வனைந்தனன் கலம்ப கத்தார்
பேராருங் கடைக்க ணித்தென் பிறப்பொழித் தவிர்வீ டெய்தப்
போர்த வினைகள் யாவும் பிரித்தருள் புரிவீர் நீரே. (௧௦௧)

# சீகாளத்திக்கலம்பகம்

## முற்றிற்று.

---

* முக்கோ - மூன்றுலகம். கனம் - மேன்மை. கம் - கூட்டம்.

## தனியன்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சாலிவா கனசகாப்தந் தக்கவா
யிரத்தெண் ணூற்றின்
மேலிரு பத்தே ழாண்டாம் வியன்குரோ
தியிற்சி ராடி
மாலெனும் வாரத் தன்று மாதுமா
பதிக டாட்சத்
தாலுயர் சீகா ளத்தித் தலக்கலம்
பகஞ்சொற் றேனே.

வாழ்த்து.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அமரர்தொழு நாகலிங்கப் பெருமான் வாழி
ஆதிசத்தி ஞானப்பூங் கோதை வாழி
சமயமே லாஞ்சைவ சமயம் வாழி
சாற்றரும்வெண் ணீறுருத்தி ராக்கம் வாழி
இமிசமகற் றமுதகுண நால்வர் வாழி
திருக்கடைக்காப் பாதிதமிழ் முறைகள் வாழி
யிமகிரிநேர் காளத்தி மலையும் வாழி
யோர்கார்நீர் பார்வாழி யென்று மாதோ.

கலம்பகப் பாட்டியல்.

சொல்லிய கலம்பகஞ் சொல்லியவொருபோகு
முதற்கண் வெண்பா கலித்துறை புயமே
யம்மானை யூசல் யமகங் களிமறம்
சித்துக் காலந் தீங்கே வண்டே
கொண்டல் மருள் சம்பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே யின்னிசை
புறமே யகவல் விருத்த மெனவருஞ்
செய்யுட் கலந்துட னெய்திய வந்தமு
மாதி யாக வருமென மொழிப.

பன்னிருபாட்டியல்.

கலம்பகத் தூட்புயங் கைக்கிளை தவமே
காலம் வண்டம் மானை காற்றுப் பாணன்
குறஞ்சித் திரங்கல் குளிர்தழை சம்பிரதம்
மறந்தா தூசன் மதங்கம் மடக்கென
விரவிழு வாறும் வேண்டு முறுப்பா
மொருபோகு வெண்பா வுடன்கலித் துறையிவை
நிரையே முதற்க ணின்றுபிற் கலந்தவைம்
பாத்துறை விருத்தமந் தாதி வருமே
வந்தா லீசற்கு வருநூறு முனிமெய்யர்க்
கைந்தஃகு தாசர்க் காந்தொண் ணூறு
மமைச்சர்க் கெழுப தைம்பது வணிகர்க்
கமைந்த வேளையோர்க் காறைந் தறவே.

தொன்னூல் விளக்கம்

## பிழைதிருத்தம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௩ | ௫ | ௩ | ராமகத் | ராகமத் |
| ௧௫ | ௧௮ | ௬ | நய்ந்து | நயந்து |
| ௧௯ | ௩௫ | ௧ | செவித்து | சேவித்து |
| ௨௭ | ௬௯ | ௪ | மச்சானையண் | மச்சானையுண் |

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| **அ.** | |
| அஞ்செழுத் | ௨௮ |
| அடியரினங் | ௨௩ |
| அண்டமெண் | ௧௭ |
| அமரர்தொழும் | ௩௭ |
| அருநாயிறு | ௨௬ |
| அருள்விரவு | ௨௩ |
| அவிருலகெ | ௩௩ |
| **ஆ.** | |
| ஆடுமயிற் | ௩௨ |
| ஆலடி | ௧௪ |
| ஆலத்தை | ௨௯ |
| **இ.** | |
| இடமார் | ௧௫ |
| இருநாகஞ் | ௩௦ |
| இனமணி | ௩௪ |
| இன்னறரு | ௩௦ |
| **ஈ.** | |
| ஈட்டுக் | ௨௫ |
| **உ.** | |
| உண்கணு | ௧௩ |
| உருப்பவள | ௨ |
| **எ.** | |
| எண்ணுறு | ௧௦ |
| என்றூழ் | ௩௧ |
| **ஒ.** | |
| ஒன்றத்தூர் | ௩ |
| **க.** | |
| கங்கைநீர் | ௧. |
| கண்டமுச்சுடர் | ௧௯ |
| கண்பார்த் | ௩ |
| கல்விநல | ௧௪ |
| கற்றோர் | ௧௫ |
| கல்லார்க்கறி | ௩௩ |
| கன்யடமா | ௧௬ |
| **கா.** | |
| காசரியார் | ௩ |
| காணவரி | ௨௪ |
| காண்டிப | ௩௪ |
| காமர்மதனம்பு | ௩௨ |
| காலன்றனை | ௨௩ |
| காமேலாவா | ௨௦ |
| காளகண்ட | ௨௦ |
| காளக்கடா | ௧௦ |
| காளத்திநாதன் | ௨௪ |
| காளத்திநாதா | ௬ |
| காளத்தியின் | ௩௦ |
| **கு.** | |
| குமரனைப் | ௨௪ |
| குமுதமு | ௧௫ |
| **கூ.** | |
| கூரானைக் | ௩௫ |
| **கே.** | |
| கேளம்மே | ௨௭ |
| **கொ.** | |
| கொண்டல்கா | ௧௭ |
| **கோ.** | |
| கோகனக | ௩௫ |
| **ச.** | |
| சம்போசிவ | ௨௧ |
| **சா.** | |
| சாதியிலே | ௨௯ |
| சாரதை | ௨௨ |
| சாலிவாக | ௩௭ |
| **சி.** | |
| சிற்பநூல் | ௬ |
| **சு.** | |
| சுகம்விரவு | ௨௪ |
| சுருதி | ௧௧ |
| **சூ.** | |
| சூழ்செஞ் | ௧௮ |
| **செ.** | |
| செய்யனே | ௩௬ |
| **சே.** | |
| சேலன்ன | ௯ |
| சேவித்து | ௧௯ |
| **சொ.** | |
| சொற்றவ | ௫ |
| **த.** | |
| தகுந்தவத்த | ௨௮ |
| தகைபெறு | ௩௧ |
| தண்ணூரு | ௨ |
| தராதல | ௯ |
| தளர்ந்தவர்க் | ௩௦ |
| **தா.** | |
| தாளத்தன | ௩௬ |
| **தி.** | |
| திரமருவு | ௩ |
| திருமா | ௨௫ |

செய்யுள். பக்கம்.

தி.
திங்கல் உ௪
ந.
நகப்பிராட்டி உ
நங்கைபால் க௯
நா.
நாடுபொன் உ௩
நாதஞ்செறி உ௬
நி.
நிலம்பகர் ௯
நினைத்தண் உ௪
நீ.
நீதர்காளத்தி க௬
நீர்பூத்த ௬
ப.
பகாருங் உ௪
பஞ்சமமார் ௩0
பம்பரசேர் க௫
பரமன்காளத் க௭
பரவுமடியார் க௩
பரிவாக உ௯
பருணிதர் உ௮
பா.
பாவிற்குட் உ௬
பார்சொல் ௩க
பி.
பிச்சாடன உ௭

செய்யுள். பக்கம்.

பு.
புயங்கந் ௪உ
புல்லரை க௮
பூ.
பூதப்படையான் ௩௫
பூபாலர் க௭
பெ.
பெரியார் க௪
பொ.
பொங்குறு ௪
பொருளுணரா ௯
போ.
போர்விசயன் கஉ
ம.
மணமே உஉ
மண்ணளந்த் உ௩
மண்ணப்ப ௰௬
மா.
மாதவனுந்தி உஉ
மாவித்தகர் க௪
மான்கை க௬
மு.
முத்திருக்கும் க௪
மெ.
மெச்சியார் உ௭

செய்யுள். பக்கம்.

மெய்யன்புடை க௭
மே.
மேதகுசீர் க௮
வ.
வண்டேகா உஉ
வரமேதந் உக
வரமேவு உக
வரியளி க0
வா.
வாராரும் ௩௬
வானமின்னி ௩உ
வாவிநீர் ௩௫
வி.
விபுதர் ௰௪
விரதவித்த உ0
வீ.
வீங்கோதை உக
வீறுடைவர் உ௫
வெ.
வெண்டாமரைக் உ
வெயில்வீசு ௩௪
வே.
வேளைத்தரு ௩௩
வேளைத்தீய்ந்த க0
வை.
வையகஞ் க௩

செய்யுள் முதற்குறிப் பகராதி முற்றிற்று.

# சீகாளத்திக் கலம்பகக்

## குறிப்புரை.

சீகாளத்தி. சீ - சிலந்தி, காளம் - பாம்பு, அத்தி - யானை, இம் மூன்றும் பூசித்த காரணத்தால், இத்தலம் இப்பெயர் பூண்டது.

### பாயிரம்.

உ. மான் முன்காட்டும் அம்புலி-மானென வழங்கும் மறுவைத் தன்னிடத்திற் காட்டிநிற்கும் சந்திரன்; பகையை முன்காட்டி நிற்றல்போல, மானைத் தன்முன் னிருக்கவைத்த புலி என்று நயம்படக் கூறியவாறு.

௩. தெண் - தெளிவு; ஈண்டு அருட்டெளிவு.

௪. உ - அடி வளத்து - வள்ளத்து என்பதின் இடைக்குறை.

3 - பொருப்பு+அளவு+ஆம்.

இச்செய்யுள், "மாவாய்மைச் சம்பந்தர் வாகீசர் வன்றொண்டர் வாத வூரர் - பூவாயின் றேறலெனுந் தமிழ்மறையாந் திருக்கடைக் காப் புச்சீர் சாலுந் - தேவாரந் திருப்பாட்டுத் திருவாசகமுமுறை யாற் செப்பு கின்ற - நாவாயே நாவாயாம் பவக்கடலைக் கடந்து முத்தி நகர்சேர் தற்கே" என்னும் திருக்கூவக்கலம்பகப் பாயிரச் செய்யுட் கருத்தது.

எ. இதில், மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்னும் ஐம் பொறிப்பெயர் அமைந்துள்ளதையுணர்க.

அ. மேசரியார் - அன்பு நீங்காதவராகி.

௯. வெண்பா அந்தாதி - கைலைபாதி காளத்திப்பாதி என்னு மந்தாதி. நக்கீரர் - நல்ல சொற்களையுடையவர்; கீர் - சொல்.

கஉ. உம்பர் வணங்கும் காளத்திநாதா என்று கூட்டிமுடிப்ப தால் விற்பூட்டுப்பொருள்கோள்; இதுபோன்று பின் வருவதையும் கண்டுகொள்க.

## நூல்.

க. எட்டடித்தரவில்,—வச்சணந்திமாலையுட் கூறிய "சீரெழுத் துப் பொன்பூ திருமணி" என்னும் மங்கலச் சொற்பாடலி லமைந் துள்ள எல்லா மங்கலச்சொற்களும்,

ஈரடித் தாழிசையில்,—சில இரத்தினப் பெயர்களும்,

பெயர்த்தும் வந்த ஈரடித்தாழிசையில்,—காஞ்சி முதலிய பஞ்ச பூதத் தலப் பெயர்களும், சுரிதகத்தில்,—கொக்கு முதலிய சில பற வைப் பெயர்களும் பொதிந்துள்ள நயத்தைக் கவனிக்க.

உம்பளம் - பரிசுப்பொருள்.

பதகன் - திருவிளையாடலிற் கூறிய - மகாபாதகன்.

உ. கம் கா கவின் உற சேர் - மேகங்கள் சோலையில் அழகு பெறச் சேரும்.

ரு. சடையினேற்றது சாரசவிந்தம் - சார்+அரவு+இந்து+ அம்; அம் - கங்கைநீர்.

வண்டர்காள்! (காளத்திநாதர்) நாளும் (செய்யும்) வண்மையில் அத்தியையே ஒத்தவர்; அத்தி - சமுத்திரம்.

எ. காளத்திப் பெருமான், உமைபாற்கிட்டும், திருவுளங்கொள் ளும், எண்ணும் எனக்கூட்டி முடிக்க; பெருமான் பலமாளேடு ஒருங் கிருக்கும் என்பது நயம்.

அ. எண்ணுறும்-எண் உறும் இயல் நெய்-சிறியதிற்பெருமையா யெண்ணப்படும்எள்ளினுளுற்றுப்பயிலும்நெய்;எண்ணையென்றபடி. இது வியாபகலட்சணத்திற் கெடுத்துக் காட்டாய் காட்டும் உவமை

௯உ. வள்ளை-கலவை-முன்னை-பண்ணை-பொன்னுங்காணி என்னும் கீரைப் பெயர்களமைந்து வேறு பொருள் பயக்கும் நயத்தைக், காண்க.

௯௩. குரு மீன்தான் உயர் வீடு என்றான் - வியாழன் மீனே (நமக்கு) உயர்ந்த மோக்ஷம் போல்வது என்றான்; குருவுக்கு தநுசும் மீனமும் முக்கிய வாசத்தானம். அதின் மீனராசியே ஆட்சி என்பதும் வேறு பொருள்.

சீடன் - குருவின் சீடனாகிய சந்திரன்; ஞெண்டு - கர்கடக விராசி, இது அவனாட்சி.

௯௪. கெளிறு - கெளிற்றுமீன், இது விரற்குவமை. மால்-வலை. மாலாவார்-மையலுடையார். இதில், சேல்-மலங்கு-திருக்கை-கெளிறு-வரால் பஞ்சிலை-என்னும் மீனின் பெயர்களமைந்துள்ளன.

௨அ. கழலுக்கு பூ அகம் ஆம் என்க.

௨௯. லாவண்ணியம் - அழகின் மிகுதி. கோபால-பாலம் கோ, நெற்றிக்கண்.

௩௧. கண்டு அரும் கனலைப் பிழிந்து சாறுக்குவோம் - அரும் கனலைக் கண்டு பிழிந்து சாறுக்குவோம், கண் தரும் கன்னலைப் பிழிந்து சாறுக்குவோம், கண் - கணு.

மெய்யிற்புலி-உடம்பாற் புலிபோல்வது, பூனை என்றபடி; பூசை பூனை; மெய் இற்புலி எனக் கண்ணழித்து இல்லில் வழங்கும் மெய்ம்மையான புலி எனப் பொருள்கண்டு பூனை என்பதும் ஒன்று.

௩உ. புத்தி முழங்கான் மட்டோ? என்பது புத்தியின்மையைக் குறிக்கும் ஓர் குறிப்புப் பழமொழி.

௩௩. குமரி-பெண், கற்றாழை; மணம் - விவாகம், வாசனை; சோறு - அன்னம், கற்றாழையி னுள்ளிருக்கும் வெள்ளியதோர் பொருள்; மற்றும் சில சொற்கள் நயம்பட நிற்றலை உய்த்துணர்க.

௩௪. பொங்கொரி-பொற்கொளி எனத் திருத்துக.

௩௭. தும்பை மலர் இத்தலத்துப் பெருமானுக்கு மிகுதியும் சாத்திவரும் வழக்கு முண்டு.

௩௯. காலோவா தொளிர் காளத்தி என்றது பஞ்சதலங்களுள் இது வாயுத்தலமென்பது தோற்றியது.

பால் கொள்வார்-பாலை விலைக்குப் பெறுவார், உன்னிடம் சேருவார்;

சாலோரும் - என்பதில் ஓரும் அசை.

௪0. சுரதம் - பிரதிஞ்ஞை, புணர்ச்சி.

௪௧. கும்போதயமுனி - அகத்தியர், இவர் இத்தலத்தில் வழிபட்டுப் பொன்முகரி யாற்றினை வரவழைத்தவர்.

௪௬. பூ மணம் முன் வண்டே - என கிறுத்தி பூவின் மணத்தையே நாடிச் செல்லும் வண்டே எனப் பொருள்காண்க. முன் - முன்னுதல், நாடல்.

௪௭. கீரன் - நக்கீரதேவர். இவர் இத்தலத்தில் வழிபட்டுக் குட்டநோய் நீங்கப்பெற்றுக் கைலைபாதி காளத்திப்பாதி என்னும் வெண்பா அந்தாதி யியற்றியருளினவர்.

௪௯. அறுபதம் - ஆறுகால்கள்; (அற்றபதம், இல்லாதபதங்கள்) எனப்பொருள் படலால் சிலேஷ்டம்.

௫௨. தோலுரத்தோல் - தோலினது வலிய தோல்; தோல் - யானை.

௫௪. குரங்கி - சந்திரன்.

௫௬. ஓம்மல் - பொறாமையாற் பேசுஞ் சொல்; இது ஓமலென்றும் வரும்.

௫௭. இரும்மை - இரும்பினை; பெரிய பாம்பினை; பை - படம், ஆகுபெயராய்ப் பாம்பை யுணர்த்திற்று.

தேசிகன் - ஆசிரியன், பொன்; பொன்னென்னும் பொருளில், தேசிகம் என்பது உயர்வு விகுதிபெற்றது.

கூழ் - கூழென்னும் உணவு; பொன்.

அடுத்தவரும் - ஆசைகொள்வர், மாசைகொள்வர். இச் செய்யுளில், பொன்னின் பரியாய நாமங்கள் அமைந்துள்ளன உணர்க.

௫௧. காசுப்பை - பணப்பை, மணிச்சூட்டுடைய பாம்பு.

௬௪. பொருள் - பிள்ளை.

௬௮. பிச்சி ஆர் குழல் - சிறு சண்பகஞ் சூடிய கூந்தல்.

௬௯. முலே - முல்லை, கற்பு.

எ௨. தனு - மேருவாகிய வேதண்டம் ; வேதண்டம் - மலை. உபாய நான்கில் இறுதியது.

எ௩. எ௪. எ௫-வது செய்யுள்களில் கள்ளின் பிரதிநாமங்கள் சில புதைந்துள்ளன; அறிக.

எ௪. மாற் - மாலெனத் திருத்துக. மாமி - ஈண்டுப் பூதேவி. காலுண்ணல் - காற்றை யுண்ணுதல்.

எ௫. சட்டி - சஷ்டிதிதி; கொக்கு - மாமரமான சூரபதுமன்.

எ௬. காளத்தி - கானமாகிய தீ; காளம் - விஷம், தீ-குறுக்கல்.

எஎ. பஞ்சமம் - அழகு.

அ௪. அணங்கனையா ரிருவர் - இத்தலத்துப் பேறுபெற்ற கன்னியரிருவர்.

௯௪. மெதகு - மேதகு எனத் திருத்துக.

௯௫. ஆப்பியம் - விநோதம்.

௯௮. எவண் - யாவன்.

௯௯. கோகணகன் - சிறந்த இரணியன்.

௧0௧. வார் - அன்பு.

——:0:——


உ

ஸ்ரீ காளத்திநாதர்

# சகடபந்தம்.

வஞ்சிவிருத்தம்.

கா ந மா ப ர மா சு கா
கா சு மா சு ணை நா ணை கா
கா ணை நா டு று மா ள கா
கா ள மா தி ர மா ந கா.





இதன்பொருள்:—பரமா - மேலானவனே!—சுகா - சுகசொரூ
பனே!,—காசு மாசுணை நாண - மணி (சூட்டுடைய) சர்ப்ப அரை

நாணுடையவரே!,—கா காண நாடுறும் ஆள - வருத்தத்துடன் (உம்மைச்) சேவிக்க விரும்பும் (அடியேனை) ஆளாகவுடையவரே!,—கா காளம் மாதிரம் மா நகா - சோலைகள் (புடைசூழப்பெற்ற) பாம்பும் யானையும் (வணங்கும்) பெரியகாளத்தி யென்னும் தக்ஷிணகைலாச மலையையுடையவரே!,—நமா - வந்தனஞ் செய்கின்றனன்.,—கா - காத்தருள்வீராக. என்றவாறு.

குறிப்பு:—நாண! என்பது, மேருமலையாகிய வில்லுக்குப் பூட்கும் வாசுகியாகிய நாணுடையவரே! என்பதுமாம். பாமா என்பது, தன்னிலுமிக்க தொன்றின்றித் தானே பெரியதிற் பெரியதாய் நிற்குந் தன்மையையும்; மாசுண நாண! எ-து, அடைந்தாரின் குறைவைக்குறியாது ஆதரிக்கும் அருட்டிறத்தையும்; ஆள! எ-து, (தாழ்ந்ததிற்றாழ்ந்த என்னையுமாட்கொண்டமையின்) பேருளுடைமையையும்; காள மாதிர நகா! எ-து, பாலூட்டினார்க்கு நஞ்சூட்டலும், உணவூட்டினார்க்கு உயிரோட்டலுமுடைய இருதிறநாகத்தையும் தமது கண்ணருள் தந்து தம்மேனியிற் சேர்த்துத் தூயவுடம்பினராயிருக்கும் சுத்தத்தையும் விளக்கிநின்றபடியாம்.

நாண ஆள என்பன ஈறுகெட்டவிளி. நகம் - மலை. காளமும் அத்தியும் பூசித்த காரணத்தாற் போந்தபெயர் காளத்தி.

அன்பளிப்பு



## ஸ்ரீ காளத்திநாதர்.

நேரிசைவெண்பா

காளத்தி யப்பா கடையேன் படுமிடர்தீர்த்
தாளத் தயையு ளமையாதென் - தாளத்
தனத்தென்றாய் ஞானம்மை சாற்றுது மென்றீ
வினைத்திறமோ வென்செய்கு வேன்.

## ஸ்ரீ ஞானப்பூங்கோதையம்மை

நேரிசைவெண்பா.

தென்கயிலை யென்றொளிரோங் சீகாளத்திப்பதிவாழ்
மன் கருணை ஞானமா மாதேவி - மென்கமழ்ப்பூந்
தாமரையைச் சிந்திக்குந் தக்கோ ருயர்கல்வி
மாமருசல் விடுறவாழ் வார்.